**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 87/2007 |
| Prosecution Witness | : | அ.சா.6 |
| Name | : | ஜோதி மகாலிங்கம் (காவல் ஆய்வாளர்–ஓய்வு ) |
| Father's / Husband Name | : | மாரிமுத்து |
| Address | : | மன்னார்புரம், திருச்சி |
| Age | : | 62/2025 |

**<u>தேதி : 07.01.2026</u>**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.ச. மோகனபிரியா சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் கடந்த 2018 ஆம் ஆண்டு தஞ்சாவூர் மேற்கு காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து பணிமூப்பு அடிப்படையில் பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 2005 ஆம் ஆண்டு பெரம்பலூர் குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியிலிருந்தபோது சென்னை CBCID IG அலுவலகத்திலிருந்து வரப்பெற்ற புகாரின் அடிப்படையில் நிலையக் குற்ற எண். 21/2005 , U/s. 420, 120(b),511 of IPC ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 3 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று பார்த்தபொழுது பெரம்பலூர் குற்ற எண். 79/2000 என்ற வழக்கில் ஏற்கெனவே தயார் செய்யப்பட்டிருந்ததால் நான் தனியாக நான் தயார் செய்யவில்லை. மேலும், இவ்வழக்கினுடைய முக்கிய ஆவணமான விபத்து வழக்கில் பெரம்பலூர் அரசு மருத்துவமனை சென்று Accident Register பெறப்பட்டது. இவ்வழக்கில்

புகார்தாரரான United India Insurance company ன் Divisional Manager ரவி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெறப்பட்டது மற்றும் விபத்து வழக்கில் காயம் பெற்று சிகிச்சை பெற்றிருந்த கருணாநிதி என்பவரை விசாரித்தும் வாக்குமூலம் பெறப்பட்டது. மேலும் மற்ற சாட்சிகளான பாஸ்கரன், பங்காருசாமி, ராஜேந்திரன், ரவி, த/பெ. கல்யாணசுந்தரம், மற்றும் புகழேந்தி, மருத்துவர் பால் ஆகியோரை விசாரணை செய்தும், வட்டார போக்குவரத்து அலுவலர் விஜயக்குமார் என்பவரை விசாரணை செய்து இவ்வழக்கின் விபத்து வழக்கினை புலன் விசாரணை செய்த ஆய்வாளர் ராஜ்குமார் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். மேற்படி எதிரிகள் மாண்புமிகு பெரம்பலூர் அமர்வு நீதிமன்றத்தின் முன்பிணை பெற்றுவிட்டதால் அவர்களை கைது செய்யவில்லை . என் புலன் விசாரணையை முடித்து Chennai CBCID Senior Legal Advisor அவர்களிடம் மாதிரி சட்டக் கருத்துரை பெற்று எதிரிகள் மீது 07.06.2006 ஆம் தேதி சட்டப்பிரிவு 192, 420, 471, 120(b) r.w. 511, 192,197,218 இ.த.ச. பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

31.08.2005 அன்று Confidential DIG அலுவலகத்திலிருந்து வரப்பெற்ற புகாரின் அடிப்படையில் உடனடியாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி புகாரிலுள்ள C6/1195/165128/2005 என பரிந்துரைத்த அலுவரின் விவரம் எனக்குத் தெரியாது. அந்த 31.08.2005 க்கு பிறகு 09.12.2005 வரை காலதாமதம் ஏற்பட்டதற்கான விவரமும் என்னுடைய விசாரணையில் கூறவில்லை என்று சொன்னால் சரிதான். இந்த CC.84/2001, குற்ற எண். 79/2000 என்ற வழக்கின் முழு அசல் ஆவணங்கள் எதுவும் என்னால் கைப்பற்றப்பட்டு இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். அதேபோல மருத்துவமனையில் உள்ள ஆவணங்களை இந்த வழக்கில் இறந்துபோன நபர் மற்றும் காயமடைந்த இரண்டாம் எதிரி ஆகியோருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சையான அசல் ஆவணங்கள் எதுவும் நான்

கைப்பற்றி நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த இறந்துபோன ராஜா என்பவருடைய விபத்து பதிவேட்டில் மணி 10.30 என்று கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரேத விசாரணை அறிக்கையில் அதே தேதியில் காலை 10.00 மணிக்கு பிணக்கூறாய்விற்காக சவக்கிடங்கில் இருந்ததாக என் விசாரணையில் முரணாக இருந்தது குறித்து சங்கதிகள் விசாரித்து நான் தெரிந்துகொள்ள வில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள இருசக்கர வாகனங்களின் உரிமையாளர்கள் மற்றும் RC Book ஆகியவற்றை கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் இறந்துபோன குமார் என்பவருடைய சகோதரரை மருத்துவமனைக்கு அழைத்துவந்ததாகவும், அந்த விபத்து பதிவேட்டில் நாடித்துடிப்பு ஏதும் இல்லை என்ற காரணத்தினால் சவக்கிடங்கிற்கு மருத்துவர் அனுப்பி வைத்தது குறித்து மேற்கண்ட நபரிடமிருந்து பெற்ற புகாரை மறைத்து தவறுதலாக முதலாவது எதிரியை இந்த வழக்கில் குற்றவாளியாக சேர்த்து விசாரிக்கிறேன் என்றால் சரியல்ல.இந்த வழக்கில் குமார் என்பவரை விசாரித்து சாட்சியாக சேர்க்காமல் விடுத்தது குறித்து காரணம் எதுவும் கூறப்படமுடியாது என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் இழப்பீடு கோரியதாக தாக்கல் செய்யப்பட்ட எந்த ஆவணங்களையும் நான் கைப்பற்றி சான்றாவணமாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். உயர்நீதிமன்ற நீதிமன்றத்தின் உயர் அலுவலரால் அனுப்பப்பட்ட புகார் என்பதால் முழுமையாக விசாரணை செய்யாமலும் தொடர்புடைய அசல் ஆவணங்களை கைப்பற்றாமலும் சாட்சியாக சேர்க்கவேண்டிய நபர்களை சாட்சிகளாக சேர்க்காமலும் இயந்திரத்தனமாக முதல் தகவல் அறிக்கை என்னால் பதிவு செய்யப்பட்டும் சாட்சிகளை விசாரித்ததாகவும், இறுதி அறிக்கையும் நானே தாக்கல் செய்துள்ளது சட்டத்திற்கு முரணானது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் எந்த ஆவணங்களையும் ஒப்பீட்டு நோக்கில் கையெழுத்து நிபுணர் ஒப்பிட்டு கருத்துரை பெறவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நீதிமன்றத்தில் குற்றத்தை ஒப்புக்கொண்டு அபராதம் செலுத்திய நபரை குற்றவாளியாக

சேர்க்கவில்லை என்றால் சரிதான். இந்த நபர்களுக்கும் இறந்துபோன நபர்களுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. அந்த இறந்து போன நபர்களுக்காக எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. இரண்டாவது எதிரிக்கு விபத்தில் ஏற்பட்ட காயத்திற்கு பிறகு தன்னுடைய சுயநினைவிற்கு எப்பொழுது வந்தார் என்ற விவரம் எனக்குத் தெரியாது. அதேபோல இந்த வழக்கினைப் பொறுத்தவரை என்னால் எதிரிகள் மீது கூறிய விதத்தில் எந்தக் குற்றமும் செய்யவில்லை என்றாலும் அவர்கள் மீது தவறுதலாக குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**இரண்டாம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

(1 மற்றும் 3ம் எதிரி தரப்பில் விசாரிக்கப்பட்ட குறுக்கு விசாரணையை 2ம் எதிரி ஏற்று அனுசரிக்கிறார் )

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/–.
Judicial Magistrate No.1(FAC)
Perambalur.